EXAMS DAILY தமிழ்

வழங்கும்

# நடப்பு நிகழ்வுகள் ஆகஸ்ட் 2019

நடப்பு நிகழ்வுகள் ⌄ புதிர் ⌄ முந்தய வினாத்தாட்கள் ⌄ பாடக் குறிப்புகள் ⌄ அறிவிக்கைகள் ⌄ தேர்வு முடிவுகள் ⌄ பாடத்திட்டம் ⌄

## முக்கியமான நாட்கள்

### ஆகஸ்ட் 01 - உலக நுரையீரல் புற்றுநோய் தினம்

- உலக நுரையீரல் புற்றுநோய் தினம் ஆகஸ்ட் 1, 2019 அன்று அனுசரிக்கப்படுகிறது. மார்பக, பெருங்குடல் மற்றும் புரோஸ்டேட் புற்றுநோய்களைக் காட்டிலும் ஆண்டுதோறும் அதிக உயிர்களைக் கொல்லும் நுரையீரல் புற்றுநோய் உலகளவில் மிகவும் பொதுவான புற்றுநோய்களில் ஒன்றாகத் தொடர்கிறது. உலகளவில் புற்றுநோயால் மரணப்பிவர்களில் ஐந்தில் ஒருவர் நுரையீரல் புற்றுநோயால் இறப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## தேசிய செய்திகள்

### முத்தலாக் மசோதாவுக்கு ஒப்புதல் அளித்தார் ஜனாதிபதி

- உடனடி முத்தலாக் நடைமுறையை ரத்து செய்யும் 2019 ஆம் ஆண்டு முஸ்லீம் பெண்கள் (திருமணம் தொடர்பான உரிமைகள் பாதுகாப்பு) மசோதாவுக்கு ஜனாதிபதி ராம் நாத் கோவிந்த் ஒப்புதல் அளித்துள்ளார். இந்தச் சட்டம் 19 செப்டம்பர் 2018 முதல் நடைமுறையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த மசோதாவின்படி உடனடி முத்தலாக் நடைமுறை செல்லாததாகவும் சட்டவிரோதமாகவும் மேலும் இதை தண்டனைக்குரிய குற்றமாகவும் அறிவித்தது.

### இந்தியா போஸ்ட் பேமென்ட்ஸ் வங்கியை எஸ்.எஃப்.பி. ஆக மாற்ற தபால் துறை முடிவு

- இந்தியா போஸ்ட் பேமென்ட்ஸ் வங்கியை (ஐபிபிபி) ஒரு சிறிய நிதி வங்கியாக (எஸ்.எஃப்.பி) மாற்ற தபால் துறை முடிவு செய்துள்ளது, இதனால் வாடிக்கையாளர்களுக்கு சிறிய கடன்களை வழங்க முடியும். 100 நாட்களில் ஐபிபிபிக்கு ஒரு கோடி கணக்குகளைத் திறக்கவும் திட்டமிட்டுள்ளது.

## குஜராத்

### புதிய தொழில்துறை கொள்கையை வகுக்க 10 பணிக்குழுக்கள் உருவாக்கப்பட்டன

- குஜராத் முதலமைச்சர் விஜய் ரூபானி மாநிலத்தின் புதிய தொழில்துறை கொள்கையை வகுப்பதற்கான உள்ளீடுகளை ஆய்வு செய்ய, மதிப்பாய்வு செய்ய மற்றும் பரிந்துரைக்க 10 பணிக்குழுக்களை அமைத்துள்ளார். மாநிலத்தின் தற்போதைய தொழில்துறை கொள்கை 2015 இல் செயல்படுத்தப்பட்டது. தலைமை செயலாளர் ஜே.என்.சிங் தலைமையில் இந்தப் பணிக்குழுக்கள் செயல்படும்.

**புது தில்லி**

**இந்திய விமானப்படையின் வசதி மற்றும் விளம்பர பெவிலியனை மனிதவள மேம்பாட்டு அமைச்சர் திறந்து வைத்தார்**

- மனிதவள மேம்பாட்டு அமைச்சர் ரமேஷ் போக்ரியால் நிஷாங்க் புது தில்லியில் உள்ள தேசிய பால் பவனில் இந்திய விமானப்படை வசதி மற்றும் விளம்பர பெவிலியனை திறந்து வைத்தார். இந்திய விமானப்படையில் சேர மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்த பெவிலியனை இந்திய விமானப்படை அமைத்துள்ளது.

**சர்வதேச செய்திகள்**

**இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை அரசு விசா கட்டணத்திலிருந்து விலக்கு அளித்துள்ளது**

- இலங்கை அரசாங்கத்தால் சுற்றுலா நோக்கங்களுக்காக செல்லும் பயணிகளுக்கு விசா கட்டணத்திலிருந்து விலக்கு பெற்றுள்ள 48 நாடுகளில் இந்தியாவும் இடம்பெற்றுள்ளது. இலங்கைக்கு வரும் மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகையில் நான்கில் ஒரு பங்கு இந்திய சுற்றுலாப் பயணிகள். சுற்றுலா என்பது இலங்கையின் மூன்றாவது பெரிய மற்றும் வேகமாக வளர்ந்து வரும் வெளிநாட்டு நாணயம் ஈட்டும் துறை ஆகும்.

**தெற்காசிய காற்று தர தொழில்நுட்ப முகாமை ஏற்பாடு செய்துள்ளது அமெரிக்க தூதரகம்**

- நேபாளத்தில் உள்ள அமெரிக்க தூதரகம் காத்மாண்டுவில் தெற்காசிய காற்று தர தொழில்நுட்ப முகாமை ஏற்பாடு செய்துள்ளது. இந்த முகாமின் நோக்கம் காற்று மாசுபாட்டினால் ஏற்படும் அரசியல், சமூக மற்றும் அறிவியல் பிரச்சனைகள் குறித்து விவாதிப்பதாகும்.

**வணிகம் & பொருளாதாரம்**

**இந்தியா 5 லட்சம் டாலர் மானியத்தை காம்பியாவுக்கு வழங்குகிறது**

- திறன் மேம்பாடு மற்றும் குடிசைத் தொழில் திட்டத்திற்காக இந்தியா 5 லட்சம் டாலர்ககளை காம்பியாவுக்கு மானியமாக வழங்கியுள்ளது. மேலும் பாரம்பரிய மருத்துவ முறைகள் மற்றும் ஹோமியோபதி துறையில் ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையெழுத்திட்டன.

## மாநாடு

### 52வது ஆசியான் [ASEAN] உச்சி மாநாடு

- தென்கிழக்கு ஆசிய நாடுகளை சேர்ந்த வெளியுறவு அமைச்சர்கள் பாங்காக்கில் நடைபெறும் 52வது ஆசியான் [ASEAN] உச்சி மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். அதிகரித்து வரும் உலகளாவிய சவால்களுக்கு மத்தியில் வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்கும் பிராந்தியத்தில் செழிப்பை மேம்படுத்துவதற்கும் ஆழ்ந்த ஒருங்கிணைப்புக்காக இக்கூட்டம் நடைபெறுகிறது.

## நியமனங்கள்

### ஐபிஎஸ் அதிகாரி ராகேஷ் அஸ்தானாவுக்கு போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டது

- ஐபிஎஸ் அதிகாரி ராகேஷ் அஸ்தானாவுக்கு ஆறு மாதங்களுக்கு போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போது அவர் சிவில் விமான பாதுகாப்பு பிரிவின் பொது இயக்குநராக பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## திட்டங்கள்

### வெளியீட்டு பிரிவிற்கான இ-திட்டத்தை மத்திய அமைச்சர் ஜவடேகர் தொடங்கி வைத்தார்

- புத்தக ஆர்வலர்களுக்கு நிகழ்நேர கொள்முதல் வசதிகளை வழங்குவதற்காக தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் வெளியீட்டு பிரிவிற்கான www.publicationsdivision.nic.in இன் மறுவடிவமைப்பு செய்யப்பட்ட மாறும் வலைத்தளத்தை தொடங்கினார். இவ்வலைத்தளம் வெளியீட்டு பிரிவின் புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகள் பற்றிய தகவல்களை வழங்கும்.

### அடல் சமூக புதுமை மையம்

- சமூக மட்டத்தில் புதுமைகளின் உணர்வை ஊக்குவிப்பதற்காக பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் தர்மேந்திர பிரதான் புதுதில்லியில் அடல் சமூக புதுமை மையத்தை தொடங்கிவைத்தார். இம்முயற்சி சமுதாயத்திற்கு சேவை செய்வதற்கான தீர்வு சார்ந்த சிந்தனை மூலம் புதுமையின் உணர்வை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## புரிந்துணர்வு ஒப்பந்தம்(MoU), ஒப்பந்தங்கள் & மத்திய அமைச்சரவை ஒப்புதல்

### அடுத்த அமர்விலிருந்து காகிதமில்லா மக்களவையாக மாறவுள்ளது

- மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அடுத்த அமர்விலிருந்து கீழ் சபை காகிதமில்லா மக்களவையாக மாறும் என்று அறிவித்துள்ளார். இந்த நடவடிக்கை கோடிக்கணக்கான ரூபாயை அரசுக்கு மிச்சப்படுத்தும்.

### மாஸ்கோவில் இஸ்ரோ தொழில்நுட்ப தொடர்பு பிரிவு அமைக்க அமைச்சரவை ஒப்புதல்

- ரஷ்யாவின் மாஸ்கோவில் இஸ்ரோ தொழில்நுட்ப தொடர்பு பிரிவு (ஐ.டி.எல்.யூ) அமைப்பதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. ரஷ்யா மற்றும் அண்டை நாடுகளில் உள்ள விண்வெளி ஏஜென்சிகள் மற்றும் தொழில்சாலைகளுடன் பரஸ்பர ஆற்றலுடனான விளைவுகளுக்காக விளைவுகளுக்காக இந்தப்பிரிவு ஒருங்கிணைந்து செயல்படும்.

### உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் மசோதாவை அறிமுகப்படுத்த அமைச்சரவை முடிவு

- இந்திய தலைமை நீதிபதியைத் தவிர்த்து உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 30 லிருந்து 33 ஆக உயர்த்தும் மசோதாவை அறிமுகப்படுத்த அமைச்சரவை முடிவு செய்துள்ளது. உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 2016 ல் அரசு 906 லிருந்து 1079 ஆக உயர்த்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

### இஸ்ரோ-பொலிவிய விண்வெளி நிறுவனம் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

- அமைதியான நோக்கங்களுக்காக விண்வெளியை ஆராயவும் பயன்படுத்தவும் ஒத்துழைப்பு அளிப்பதற்காக இஸ்ரோ மற்றும் பொலிவிய விண்வெளி நிறுவனத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

## விளையாட்டு செய்திகள்

### கோடிப் (COTIF) கோப்பை 2019

- ஸ்பெயினின் வாலென்சியாவில் நடைபெறும் கோடிப் (COTIF) கோப்பை 2019ல் இந்திய மகளிர் கால்பந்து அணி அதன் தொடக்க ஆட்டத்தில் வில்லாரியல் சி.எ.ஃப் அணியை எதிர் கொள்கிறது.

FB :ல் சேர

English-ல் சேர – தமிழில் சேர– Examsdaily Tamil

WhatsAPP - குரூப்பில் சேர - கிளிக் செய்யவும்